ஸந்தாபயதி ஸ்வம்தேஹமாபாத தலமஸ்தய:
தஸ்ய மத்யே வக்ஷ்னிஷிகா அணீயோர்த்வ வியவஸ்தித:
நீலதோயத மத்யஸ்தா த்வித்யுல்லேகேவ பாஸ்வரா,
நிவாரஷீக வத்தன்வீ பீதாபாஸ்யணூபமா,
தஸ்யாஸ்ஸிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:
ஸப்ரஹ்ம ஸசிவஸ்ஸஹரி சேந்த்ரஸ் ஸோக்ஷர:
பரமஸ்வராட்
புதகம் ஸத்யம்ரம் ப்ரஹ1மபுருஷம் க்ருஷ்ணபிங்களம்
ஊர்தரேதம் விருபாக்ஷம் விஸ்வரூபாயவை நமோ நம:
ஓம் நாராயணாய வித்மஹே விஸூதேவாய தீமஹி தந்நோ
விஷ்ணு ப்ரசோதயாத்
ராஜாதி ராஜாய ப்ரஹஸ்ய ஸாஹினே
நமோ வயம்வை ச்ரவணாய கூர்மஹே
நமேகாமான் காமகாமாய மஹ்யம்
காமேஸ்வரோவை ச்ரவணோததாது
குபேராயவை ச்ரவணாய மஹாராஜாய நம:

ஓம் தத்ப்ரஹ்ம, ஓம் தத்வாயு, ஓம் ததாத்மா,
ஓம் தத் ஸத்யம், ஓம் தத்ஸர்வம், ஓம் தத்புரோ நம:
அந்தஸ்சரதி பூதேஷீ குஹாயாம் விஷ்ய மூர்த்திஷீ,
த்வம் யக்ஞஸ்த்வம் விஷட்காரஸ்த்வகம் இந்திரோதஸ்வம்
ருத்ரஸ்டத்வம் விஷ்ணுத்வம் ப்ரஹ்மஸ்த்வம் ப்ரஜாபதி:
த்வம் ததாப அபோஜ்யோதி ரஸோம்ருதம் ப்ரஹ்ம
பூர்வஸ்ஸூவரோம்
கதா புனஷ்ஷட்கர தாக்ஜகல்பக த்ரஜாரவிந்தாஜ்யுக்க்ஷ
வஜ்ரலாஸ்சிதஹே - ஸ்ரீநிவொஸத்வச்சரணாம்புஜ
த்வயம்மதீய மூர்தான மலஜ
ஓம் நிரஞ்சனாய வித்மஹே நிராபாஸாய தீமஹி
தந்நோ – ஸ்ரீநிவாச: ப்ரஜோதயாத்
ஸ்ரீலக்ஷிமி பத்மாவதி ஸமதே ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமிநே நம:
ஸ்வர்ன திவ்ய மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி.

# ப்ரதக்ஷிண நமஸ்காரம்

1. யாநி காநிச பாபாநி ஜன்மாத்தர க்ருதாநிச!
   தாநி தாநி ப்ரணஸ்யந்தி ப்ரதக்ஷிண பதேபதே!!

2. பாபோஹம் பாபகர்மாஹம் பாபாத்மா பாபஸம்பவ:
   த்ராஹிமாம் க்ருபமயாதேவா சரணாகத வத்சலா!!

3. அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம!
   தஸ்மாத் காருண்ய பாவேன ரக்ஷ ரக்ஷ ஜனார்தன:

ஶ்ரீ லக்ஷிமி பத்மாவதி ஸமதே ஶ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமிநே நம:
ஆத்ம ப்ரதக்ஷிண நமஸ்காராந் ஸமர்ப்பயாமி,

(மேற்கண்ட ஸ்லோகங்களை சொல்லிக் கொண்டு, ஸ்வாமியையே தியானித்து கொண்டு மூன்று முறை வலம் வந்து (பிரதக்ஷிணம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த பின்பு ஶ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமிக்கு சோடஸ உபசாரங்கள் செய்யவேண்டும்).

## விவிதோபசார பூஜை அல்லது சோடஸ உபசார பூஜை

சத்ரம் தாராயாமி, சாமரம் சமர்ப்பயாமி, ந்ருத்தம் தர்ஸயாமி, கீதம் ஸ்வராவயாமி, வாத்யம் கோஷயாமி, ஆந்தோளிகாய் ஆரோஹயாமி, அஸ்வான ரோஹயாமி, கஜானா ரோஹயாமி, ஸமஸ்த ராஜஉபசா, சக்தியுபசார, மந்த்ரோபசார, தேவோபசார. ஸர்வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி.

## க்ஷமார்ப்பணம்

1. மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ஜனார்த்தனம்
   யத்பூஜிதம் மயாதேவ பரிபூர்ணம் ததஸ்துதே.
   (நமஸ்காரம் செய்யவும்)

அநயாத்யான வாஹனாதி சோடஸோபசார பூஜயாச பகவான் ஸர்வாத் மக:ஶ்ரீ லக்ஷிமி பத்மாவதி ஸமேத பத்மாவதி ஸமேத ஶ்ரீவெங்கடடேஸ்வர ஸ்வரூபோ பகவான் சுப்ரீத ஸுப்ரஸன்நோ வரதோபவது.
ஶ்ரீவெங்கடேச ப்ரசாதம் சிரசா க்ருஹண்மி.

2. அகால ம்ருத்யு ஹரணம் ஸர்வ வீயாதி நிவாரணம்
   ஸர்வ பாபக்க்ஷயகரம் தேவ பாதோதகம் பாவனம் சுபம்.
   (என்று சொல்லி ஸ்வாமியின் தீர்த்தம் பெற்றுக்கொள்ள வேண்டும்)

**நைவேத்யம்** - ஓம் பூர்புவஸ்ஸுவ:, தத்ஸ விதுர்வரேண்யம்-பர்கோ தேவஸ்ய தீமஹி: தீயோ யோந: ப்ரசோதயாத். ஸத்யந்த்வர்னதந பரிஷின்சயாமி, அம்ருதமஸ்து, அம்ருதோத் ஸ்மரணமயி, ஓம் ப்ராணாய ஸ்வாஹ:, ஓம் அபானாய ஸ்வாஹ:, ஓம் வ்யானாய ஸ்வாஹ:, ஓம் பரப்ரஹம்மணேஸ்வாஹ:
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமிநே நம: மஹாநைவேத்யம் ஸமர்ப்பயாமி.

அம்ருதாபிதானமஸி உத்தரா போஷனம் ஸமர்ப்பயாமி, ஹஸ்தௌ ப்ரக்ஷாளயாமி, பாதௌ ப்ரக்ஷாளயாமி, சுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம் ஸமர்ப்பயாமி, ஸ்வர்ண மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி பிரதக்ஷிண நமஸ்காரான் சமர்ப்பயாமி, அநயாத்யான வாகனாதி சோடசோபசார பூஜயா பகவான் ஸர்வாத் மக: ஸ்ரீ லக்ஷிமி பத்மாவதி ஸமேத ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி ஸீப்ரீதஸ்ஸு ப்ரசன்னோ வரதோபவது ஸ்ரீலக்ஷிமி பத்மாவதி ஸமேத ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி ப்ரசாதம் சிரஸா க்ருஹண்மி.

**உத்வாசனம்** - யஞ்னேயன யக்ஞமய ஜந்த தேவாப் தானி தர்மாணி ப்ரதமாந்நியாசன், தேஹ நாகம், மஹிமானஸ்யந்தே யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா: (ஸ்ரீ லக்ஷிமி பத்மாவதி ஸமேத ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி யதாஸ்தானம் உபாஸ்மஹே, உத்வாஸயாமி).

******

# ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்’

## முதல் அத்யாயம்

## ஸ்ரீ பகவான் உவாச:

கலியுகத்தில் ஒரு சுபமுஹூர்த்த நன்னாளில், சாட்சாத் பூலோக வைகுண்டமான திருமலை குன்றின் மேல் ‘விஸ்வபதி’ என்கிற பக்தனுக்கு ஸ்ரீநிவாச அவதாரத்தில் தோன்றிய, ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாளாக பக்தர்களால் கொண்டாடப்படுகின்ற, ஸ்ரீமந்நாராயணன்,‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்’ ஆக பிரசித்தமடைய உள்ள இந்த விரதம் பற்றிய நூலை அனுக்கிரத்து. ஆணையிட்டு கீழ்க்கண்டவாறு தனது பக்தனிடம் கூறினார். ‘எனது பிரிய பக்தனே! விஸ்வபதி என்கிற நாமம் கொண்டவனே! எனது பிரிய பக்தனான உனக்கு இப்போது ஒரு விசேஷ விரதத்தைப் பற்றிக் கூறுகிறேன். இந்த விரதம் எனக்கு (பெருமாளுக்கு) எல்லையில்ல ஆனந்தத்தை அளிப்பது. எல்லோரும் கடைபிடிப்பதற்கு மிகவும் சுலபமானது.

கலியுகத்தில் மக்கள் தங்களது பூர்வ ஜென்ம பலன்களை அனுபவித்துக் கொண்டும், மேலும் மேலும் பாவங்களை செய்து கொண்டும். ஏராளமான கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டும் இருக்கிறார்கள். இவர்களில் சிலர், அவரவர் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக என்னை (ஏழுமலையானை) வேண்டிக்கொள்கின்றனர். எத்தனையோ சோதனைகளை கடந்து திருமலைக்கு யாத்திரை செய்து என்னை தரிசனம் செய்ய வருகின்றனர்.

எனது பக்தர்கள் என்றால் எனக்கு எல்லையில்லா அன்பும் ஆனந்தமும் ஏற்படும். என்மேல் முழு நம்பிக்கையினை வைத்து, என்னையே சரணடைந்து, தர்மபாதையில் வழி நடப்பவர்களை நானே முன்னின்று அவர்களது வாழ்க்கையை வழிநடத்துவேன்.

இப்போது நான் விவரிக்கும் இந்த விரதம் 'ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்' என்ற பெயருடன் பிரசித்தி அடைய உள்ளது. இந்த விரதம் எனக்கு எல்லையில்லா ஆனந்தம் அளிப்பது. எவனொருவன் இந்த விரதத்தை பக்தி சிரத்தையுடன் கடைபிடிக்கிறானோ, உடனே அவனது துன்பங்களிலிருந்து நிவர்த்தி அடைவான். இந்த விரதத்தை எவரேனும், எப்பொழுதேனும் கடைபிடிக்கலாம். முக்கியமாக கார்த்திகை, மார்கழி, மாசி மாதங்களிலும், பஞ்சமி, சப்தமி, ஏகாதசி திதிகளிலேனும், ஸ்வாதி, திருவோன நஷத்திரங்களிலும் இவ்விரதம் செய்து வழிபட்டால் மிகவும் விசேஷமானது.

இந்த கலியுகத்தில் எனது பக்தர்கள் படும் கஷ்டங்களை நான் நன்கு அறிவேன் பகத்தர்களே உங்களுக்கு பொருளாதார கஷ்டமானாலும், உத்தியோக, வியாபார கஷ்டங்களானாலும், உடல் நலக்குறைவானாலும் எந்த விதமான கஷ்டங்கள் நேர்ந்தாலும், மனநிம்மதி இல்லாதபோது இந்த விரதத்தை அனுஷ்டித்தால் உடனடியாக எல்லாவித கஷ்டங்களும் விலகிப்போகும். மேலும், வீட்டில் எந்த சுபகாரியங்கள் செய்யும் பொழுதும் இந்த விரதத்தை செய்தால் அந்த சுபகாரியம் எந்தவித இடையூறில்லாம்மல் பன்மடங்கு பலனளிக்கும். இவ்விரதத்தை ஆரம்பித்த உடனே சகல

சந்தோஷங்களையும், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அடைவீர்கள்.

இந்த ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத’த்தை காலையிலோ அல்லது மாலையிலோ அனுஷ்டிக்கலாம். இதில் ஐந்து அத்யாயங்கள் உள்ளன. அவற்றை மிகவும் பக்தி சிரத்தையுடன் படிக்கவேண்டும். இவ்விரதத்தை சொந்த வீட்டிலோ, வாடகை வீட்டிலோ, எனது புண்ய க்ஷேத்ரத்திலோ, அல்லது நதி தீர்த்ததிலோ செய்யலாம்.

பந்து மித்திரர்களுடன் இவ்விரதத்தை கடைபிடித்தால் மிகவும் விசேஷமாகும். இந்த விரதத்தைச் செய்யபவர்களும், கேட்பவர்களும், பக்தி சிரத்தையும் பிரசாதம் பெற்றுக் கொண்டவர்களும் அஷ்ட ஐஸ்வர்யங்களை அடைவார்கள். இவ்விரதத்தை முற்காலத்தில் எனது பிரிய பக்தர்களான எத்தனையோ முனிவர்கள் கடைபிடித்து அனுக்கிரஹம் அடைந்துள்ளார்கள். பூலோக வாசிகளாகிய உங்கள் அனைவருக்கும் இவ்விரதம் அநேக நற்பலன்களை அளிக்க உள்ளது. நிம்மதியான ஒருமித்த மனத்துடன் என்னையே தியானித்து இவ்விரதத்தை கடைபிடித்தால் இவ்விரதத்தின் பலன்கள் பண்மடங்கு பெருகும். இவ்விரதத்தை கடைபிடிப்பது மிகவும் எளிமையானது. முற்காலத்தில் முனிவர்கள் மிகுந்த ஆசார அனுஷ்டானங்களைக் கடைபிடித்து, கடோர நிஷ்டையுடன் தவங்களும். யக்ன, யாகங்களும் செய்து அடைந்த பலன்களை கலியுகத்தில் நாம் இந்த ஸ்ரீவெங்கடேஷ்வர விரத கல்பம்’ எனும் இவ்விரதத்தை செய்வதன் மூலம் அடையலாம்.

முதலில் பூஜை செய்யும் அறையை நன்றாக கழுவி சுத்தம் செய்யவேண்டும். ஒரு மண்டபத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன்கூடிய எனது படத்தை வைக்கவேண்டும். மண்டபத்தை சுவற்றில் சாய்த்து வைக்கலாம். அத்துடன் குலதெய்வங்களையும், இஷ்ட செய்வங்களையும் கூட மண்டபத்தில் வைக்கலம். நவக்கிரஹ தேவதைகளையும், அஷ்டதிக்பாலகர்களையும் ஆவாஹனம் செய்யவேண்டும். இல்லையெனில் அவர்களை மனதில் நமஸ்கரித்துக் கொள்ளவும்.

முதலில் மஞ்சள் பிள்ளையாருக்கு பூஜை செய்யவும். பிறகு இவ்விரதத்தின் ஐந்து அத்யாயங்களையும் பக்தி, சிரத்தையுடன் படிக்க வேண்டும். இதுவே முதல் அத்யாயம். மற்ற நான்கு அத்யாயங்களையும் எனது அன்பிற்குரிய, இஷ்டமான, ஈடினையற்ற முனிவர்களான விசுவாமித்திரர், வசிஷ்ர், பரத்வாஜர் மற்றும் அத்ரி முனிவர்கள் தொகுத்து அருளியுள்ளார்கள். இந்த ஐந்து அத்யாயங்களையும் படித்தபிறகு, எனக்கு இஷ்டமான ஸ்தோத்திரங்களையும் படிக்கலாம், பாடலாம். ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவிலும் கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!! என மூன்று முறை சொல்ல வேண்டும்.

மேற்கூறியவாறு இவ்விரத்ததை பந்துமித்திரர்களுடன் விவரமாக, விமரிசையாக செய்வதற்கு சக்தி இல்லாதவர்கள், விநாயகர், நவக்கிரகங்கள், அஷ்ட திக்பாலகர்களை மனதில் நினைத்து உங்கள் சக்திக்கு ஏற்றவாறு ஏதோ ஒரு பழத்தை எனக்கு பக்தி சிரத்தையுடன் நைவேத்தியம் செய்து காரிய சித்தியாகும். கஷ்டங்கள் விலகும், சகல சௌபாக்யங்களையும் அடையலாம்.

எவனொருவன் பக்தியடனும், சிரத்தையுடனும் இவ்விரதத்தை செய்கிறானோ அவனது இல்லத்தில் நானே ஸ்வயமாக வந்து பிரசாதத்தை சேவிக்கிறேன். எனது அனுக்கிரகம் உங்களுக்கு எப்போதும் உண்டு, என்று அருள் பாலிக்கிறார்.

இவ்வாறாக ஸ்ரீ வைகுண்ட ஸ்வாமி அவர்கள் ‘திம்ம ராஜீ விஸ்வபதி ராமகிருஷ்ணமூர்த்தி (விஸ்வபதீ) என்கிற பக்தனுக்கு, தனக்கு இஷ்டமான, தான் எப்போதும் வசிக்கும் திருமலை குன்றின்மேல் இவ்விரத விதானத்தை அனுக்கிரகித்து ஆசிர்வதித்தார்.

கலியுக வாசிகளாகிய நாம் எல்லோரும் இந்த விரதத்தை நியம நிஷ்டையுடன் செய்து ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி அவர்களின் அனுக்கிரகத்திற்கு பாத்திரமாகலாம், (இவ்விரதம் கடைபிடித்தவுடனே நமது கஷ்டங்கள் விலகி அநேக சுப பலன்களை அடையலாம்).

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

**முதல் அத்யாயம் முற்றிற்று.**

**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிலயே நிதயோர்த்தினாம்**
**ஸ்ரீ வெங்கட நிவாசாய ஸ்ரீநிவாஸாய மங்களம்.**

*****

# ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்’

## இண்டாவது அத்யாயம்

## ஸ்ரீ விசுவாமித்ர உவாச:

இந்த அத்யாயத்தை மஹா தபஸ்வியான ஸ்ரீ விசுவாமித்ர மகரிஷி அவர்கள் அனுக்கிரகித்து அருளியது.

கலியுக வாசிகளே’ ஸ்ரீநிவாச பிரிய பக்தர்களே! நீங்கள் செய்து வரும் இந்த ‘வெங்கடேஸ்வர விரதகல்பம்’ மிகவும் புனிதமானது. மகோன்னதமானதும் கூட. கலியுகத்தில் ஸ்ரீமந் நாராயணனின் கருணை கடாஷத்தை அடைய மிகவும் சுலபமான வழி இவ்விரத்தினை கடைபிடிப்பதே. இத்தகைய எளிமையான, சுலபமான விரத கல்பத்தை நமக்கு அருளிய ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நாம் எல்லோரும் சிரம் தாழ்த்தி வணங்குவோமாக!.

முன்னொரு காலத்தில், மகத சாம்ராஜ்யத்தில் ‘விஷ்ணுசித்தர்’ என்கிற, ஏழுமலையானின் பிரிய பக்தர் ஒருவர் இருந்தார். அவரது துனைவியார் ‘தாராமதி’ அம்மையாரும் எப்போதும் ஸ்ரீமந் நாராயணனையே தியானித்துக் கொண்டிருப்பார். அத்தம்பதியருக்கு ஒன்பது பெண் குழந்தைகள் பிறந்தனர். விஷ்ணுசித்தர் மிகுந்த அறிவாளியாக இருந்தாலும் போதிய வருமானம் இல்லாததால் அவரது குடும்பம் வறுமையால் வாடிக் கொண்டு இருந்தது.

அவ்வப்பொழுது கல்யாண சுபகாரியங்களுக்கு புரோகிதராக இருந்து அதனால் தக்ஷ்ணையாக கிடைக்கும்

அந்த சிறுதொகையில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு குடும்பம் நடத்திவந்தார். பெண்கள் விவாஹ சுபகாரியங்களை எப்படி நடத்துவது என கவலையுற்றிந்தார். எனினும் அவர் அந்த ஸ்ரீனிவாச பெருமானையே நம்பி பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தார்.

ஸ்ரீநிவாச பகத்தாகளே! ஜகத்ரஷகனான ஸ்ரீவெங்கடேச பொருமானுக்கு தனது பகத்தர்கள் என்றால் மிதமிஞ்சிய அன்பும், ஆனந்தமும் என்பது எல்லோரும் அறிந்ததே!

மாசி மாதம் பௌர்ணமி நன்னாளன்று அதிகாலையில் ஒரு வயோதிக அந்தணர் (பிராம்மணர்) ஒருவர் விஷ்ணுசித்தரின் வீட்டு வாசல் கதவை தட்டினார். ‘ஐயா! நான் வங்கதேசத்து வாசி. ஒரு யக்னம் காரணமாக போய்க்கொண்டு இருக்கிறேன், வழியில் உங்கள் தேசத்திற்கு வந்துள்ளேன். தயவு செய்து இந்த ஒருநாள் இரவு உங்கள் வீட்டில் தங்குவதற்கு அனுமதித்தால், நாளை அதிகாலையில் புறப்பட்டு விடுவேன்’ என்று வேண்டிக்கொண்டார். அதற்கு விஷ்ணுசித்தர் ‘ஸ்வாமி’ இதைவிட எங்களுக்கு வேறுபாக்யம் என்ன உள்ளது. அதிதி (விருந்தினர்) சாட்சாத் ஸ்ரீமந் நாராயணனுக்கு சமம் அல்லவா? ஆகையால் நீங்கள் எந்தவித ஆட்சேபனை இல்லாமல் எங்கள் வீட்டில் தாராளமாக தங்கலாம்’ என முதியவரை வீட்டிற்குள் அழைத்து மரியாதைகள் செய்தார்.

அன்று மதியம் அம்முதியவர் பகல் ஆகாரத்திற்கு பிறகு தாராமதியிடம் கீழ்க்கண்டவாறு விசாரித்தார். ‘ஏனம்மா ஏதோ திகிலடைந்தவாறு காணப்படுகிறாய், உன் கவலை

என்ன எதுவானாலும் சங்கோஜப்படாமல் என்னிடம் சொல்' என்று கேட்டார். அதற்கு தாராமதி, 'ஸவாமி, தாங்கள் மகா தபஸ்வி, நீங்கள் சாட்சாத் ஸ்ரீமன் நாராயணனைப்போல் இருக்கிறீர்கள். உங்களிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை என மனவேதனையெல்லாம் எனது குமாரத்திகளின் திருமணம் குறித்தே, மற்றபடி வேறெதுவும் இல்லை', என்று கூறி கவலைப்பட்டார். அதற்கு அந்த ஞானி புன்சிரிப்புடன் 'அம்மா! உன் கவலைகளை நான் கிரகித்தேன், உன் கஷ்டங்கள் விலகி, உன் புத்ரிகளுக்கு நல்லபடியாக திருமணம் நடந்தேற ஒரு அற்புத விரதத்தை உனக்கு சொல்கிறேன். இந்த விரதம் ஆரம்பித்தவுடனே உனது கஷ்டங்கனைத்தும் பொடிப்பொடியாகிவிடும். இந்த 'ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை' அனுஷ்டிப்பது மிகவும் எளிதானது' என்று கூறி விரத விதானத்தை தம்பதிகளுக்கு விவரித்தார்.

உடனே விஷ்ணுசித்தர், 'ஸ்வாமி! மிகவும் சந்தோஷம் இதைவிட மகாபாக்யம் எங்களுக்கு வேறு என்னஉள்ளது. என்றோ ஒரு நாள் எதற்கு? 'சுபஸ்ய சீக்கிரம்' என்று சொல்வார்கள் நம் முன்னோர்கள். ஆகையால் இன்று மாசி மாதம் பௌர்னமி நன்னாள், இன்றே நீங்கள் அனுமதித்தால் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை அனுஷ்டிக்கிறோம் என்று தம்பதியர் அந்த முதியவரை வேண்டினர்'.

உடனே அன்றுமாலை விஷ்ணுசித்தர் தம்பதிகள், தனது குமாரத்திகளுடன், பந்து மித்ரர்களையும் அழைத்துக் கொண்டு 'ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை' மிகுந்த பக்தி சிரத்தையுடன் செய்தார்கள் பூஜைக்கு வந்திருந்த பக்தர்கள்

எல்லோரும் தீர்த்த பிரசாதத்தை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினார்கள். பிறகு, விஷ்ணுசித்தர் தனது மனைவியுடன் அந்த முதியவருக்கு பாத நமஸ்காரம் செய்து தங்களை ஆசிர்வாதிக்கும்படி வேண்டினர். அந்த பெரியவர் விரத தீர்த்த பிரசாதத்தை பெற்றுக் கொண்டு' மனோபீஷ்ட சித்திரஸ்து. ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாச கடாக்ஷ சித்தி ரஸ்து' என்று ஆசி கூறினார்.

இதற்குள் இரவு தூங்கும் சமயம் வந்துவிட்டது. விஷ்ணுசித்தர் அந்த பிராம்மனருக்கு ஒரு சிறிய கிழிந்த போர்வையை கொடுத்து மன வேதனையோடு, 'ஸ்வாமி, இந்த ஏழையிடம் இதைவிட நல்ல போர்வை இல்லை, இந்த இரவு என்னை மன்னித்து இதை ஏற்றுக்கொள்ளவும்'. என்று வேண்டினார்.

அதற்கு அந்த பிராம்மணர் புன் சிரிப்புடன், 'ஒன்றும் கவலைப்படவேண்டாம் நான் வெளியில் தாழ்வாரத்தில் படுத்துக் கொள்கிறேன்', என்று சொன்னார். சில நிமிடத்தில் எல்லோரும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டனர்.

திடீரென்று விடிகாலையில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. ஒரே இருட்டுமயம் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. விஷ்ணுசித்தரோ வெளியில் படுத்துக் கொண்டிருக்கும் வயோதிக பிராம்மணர் எப்படியுள்ளாரோ என்று மிகவும் கவலைப்பட்டுக்கொண்டு இருந்தார். வருத்தத்துடன் எப்பொழுது விடியும் என இரவெல்லாம் முழித்துக்கொண்டு இருந்தனர் அந்த குடும்பத்தினர்.

இதற்குள் விடிந்தது மழைகுறைந்தது, ஆவலுடன் பெரியவர் எப்படியுள்ளார் என பார்க்க வந்த தம்பதியருக்கு அற்புத தரிசனம் கிடைத்தது...........

அங்கு அந்த பெரியவர் இல்லை கிழிந்த போர்வையும் இல்லை. அந்த இடத்தில் ஒரு பட்டு பொன்னாடை இருந்தது. அதில் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி விக்ரகம் புன்சிரிப்புடன் காணப்பட்டது......... நடந்தவையாவும் அத்தம்பதியருக்கு புரிந்து விட்டது.......... அவர்களது ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. வந்தவர் சாட்சாத் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே என்று தீர்மானித்தனர் ஆஹா! என்ன அதிசயம்! வந்தவரை நாம் கிரஹிக்காமல் விட்டு விட்டோமே. கடைசியில் கிழிந்த போர்வையை கொடுத்தோமே என்று நினைத்துக் கொண்டு, ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி விக்ரஹத்தை கண்ணில் ஒற்றிக்கொண்டு வீட்டிற்குள் வந்தனர். வீடெல்லாம் தங்கமயமாக, லக்ஷ்மி கடாக்ஷத்துடன் காட்சி அளித்தது. தன தான்யங்கள் நிரம்பி வழிந்தன. ஆஹா! இவையாவும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்ப மஹாத்யமே என்று கூறி அந்த ஏழுமலையானை அநேக விதமாக வழிபட்டனர்.

பார்த்தாயா? சாட்சாத் ஸ்ரீ வெங்கடேசபெருமானே அந்த பக்தனின் வீட்டிற்கு அதிதி வேஷத்தில் வந்து (முதியவர்போல் வந்து) விரத விதானம் செய்வதோடல்லாமல், தீர்த்த பிரசாதம் கூட தானே ஸ்வயமாக பெற்றுக்கொண்டார். ஸ்ரீ வெங்கடேச பெருமான் அத்தகைய கருணை உள்ளம் கொண்டவர். எவரொருவர் பக்தி சிரத்தையுடன் இவ்விரதத்தை கடைபிடிக்கிறார்களோ அவர்களது இல்லத்திற்கு தானே நேரடியாக ஏதோ ஒரு

ரூபத்தில் தப்பாமல் எழுந்தருளி காட்சி அளிப்பார். நீங்கள் எல்லோரும் கூட இவ்விரத்த்தை கடைபிடித்து ஏழுமலையானின் கருணை கடாக்ஷத்தை அடையுங்கள்'. என்று ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷி விவரித்து கூறியுள்ளார். 'ஸ்ரீலக்ஷிமி ஸ்ரீநிவாச கடாக்ஷ சித்திரஸ்து'என விசுவாமித்திரர் முனிவர் அருளினார்.

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

**இரண்டாவது அத்யாயம் முற்றிற்று**

**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிலயே நிதயேர்த்தினாம்**
**ஸ்ரீ வெங்கட நிவாசாய ஸ்ரீநிவாஸாய மங்களம்.**

*****

# 'ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்'

மூன்றாவது அத்யாயம்

## ஸ்ரீ வசிஷ்ட உவாச:

இந்த அத்யாயத்தை நிஷ்டையுடன்கூடிய மஹா தபஸ்வியான 'வசிஷ்ட மகரிஷி அவர்கள் ஸ்ரீமந் நாராயணனின் அனுக்கிரகம் பெற்று கீழ்க்க்ணடவாறு நமக்கு விவரித்துள்ளார்.

'கலியுக வாகிகளே! ஸ்ரீநிவாச பிரிய பக்தர்களே! வைகுண்டத்தில் இருக்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே இன்றைய திருமலை வாசியான ஏழுமலையான் ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமான். கலியுக வாசிகளாகிய உங்கள் எல்லோருடைய கஷ்டங்களையும் நிவர்த்தி செய்வதற்காகவே ஸ்வாமி உங்களுக்கு மிக அருகில் இந்த ஏழுமலையில் அவதரித்துள்ளார். அத்தகைய ஏழுமலையானின் அனுக்கிரகத்தை பெற இவ்விரதம் செய்வது மிகவும் நல்லது. சுலபமானதும் கூட இவ்விரதத்தை பக்தி சிரத்தையுடன் கடைபிடிப்பவர்கள் சகல சௌபாக்யங்களையும் பெறுவார்கள்.

முன்னொரு காலத்தில் அவந்தி தேசத்தில் 'பாக்ய நகரம்' என்ற ஒரு பட்டினம் இருந்தது. பெயருக்கு ஏற்றாற்போல் அந்த பட்டினத்தில் பெரும்பாலானோர் தனவந்தர்களாகவே இருந்தனர். ஆனால் அவர்கள் எப்பொழுதும் அவர்களது செல்வங்களையும், பொருளாதாரத்தையும் பற்றி நினைத்து கர்வப் பட்டுக்கொண்டு இருந்தார்களே தவிர மற்றவர்களைப் பற்றி கவலைப்படவே இல்லை. ஏழை, எளியவர்களை மிகவும்

ஏளனமாக பார்த்து வந்தனர். அத்தனை ஐஸ்வர்யங்களையும் தாங்களே சம்பாதித்ததுபோல் நினைத்து ஆனந்த வெள்ளத்தில் முழ்கியிருந்தனர். கடவுளை நினைத்து நித்ய பூஜைகளோ அல்லது விசேஷ பூஜைகளோ எந்த ஒரு பூஜையும் செய்பவர்கள் அல்லர். இவற்றையெல்லாம் கவனித்து வந்த ஸ்ருஷ்டி கர்தா ஸ்ரீமந் நாராயணனுக்கு, இந்த செல்வந்தர்கள் அனைவருக்கும் ஞானோதயம் ஏற்படுத்த வேண்டும் எனத்தோன்றியது.

ஒருநாள் தனவந்தர்கள் அனைவரும் விருந்து ஏற்பாடு செய்து கொண்டு குடிபோதையில் மூழ்கி இருந்தார்கள். அன்று ஏகாதசி (தொலி ஏகாதசி) நன்னாள். அந்த பட்டினத்து கிழக்கு வீதியில் உள்ள ஸ்ரீலக்ஷ்மி நாராயண ஆலயத்தில் ஒரு விளக்கு ஏற்ற கூட யாரும் முன்வரவில்லை. ஒருவரேனும் ஆலயத்தில் பூஜைகள் செய்ய வேண்டுமென ஆலோசிக்கவும் இல்லை அன்று மாலை திடிரென்று இருண்டமேகங்கள் (கார் மேகங்கள்) சூழ்ந்துகொண்டன. கனத்த மழை பெய்தது, வெள்ளம் கரை புரண்டோடின, வியாபாரிகளின் வீடுகள் யாவும் நீரில் மூழ்கிவிட்டன. பாக்ய நகரம் முழுவதும் இருண்டமயமாகிவிட்டது. விடியும் வேளையில் ஊரெல்லாம் தரைமட்டமாயின. வியாபாரிகள் அனைவரும் வீடு, வாசல், செல்வங்கள்னைத்தையும் இழந்து கடைசியில் கட்டிய துணியுடன் பிரமித்து நின்றனர். எதற்கு இந்த உபத்திரவம்! ஏதற்கு இந்த வெள்ளப் பிரளயம் என்று யாருக்கும் ஒன்றும் புரியாமல் தவித்து நின்றனர். அதற்குள் அவர்களுக்கு ஒரு உண்மை புலப்பட்டது.

ஊர்க்கோடியில் உள்ள குடிசைகள்யாவும் அப்படியே இருந்தன ஒரு வித சேதமும் ஏற்படாமல், மக்கனைவரும் நிம்மதியாக இருந்தனர். வியாபாரிகளுக்கு ஒரே ஆச்சர்யம் இவ்வளவு கனமழையிலும் எப்படி இந்த குடிசைகள் சேதமடையாமல் உள்ளது? என அவர்கள் ஆச்சர்யத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு இருக்கும்போது ஒரு பெரிய மின்னல் ஒளி ஏற்பட்டது. அதிலிருந்து ஒரு அசரீரி ஒலித்தது.

‘ஓ! மூடர்களே! உங்களது ஐஸ்வர்யங்களே உங்களது பெருமை என்ற மூட நம்பிக்கையினாலேயே இவ்வாறு ஏற்பட்டது. அதோ அந்த குடிசையில் வாழும் ‘தேவய்யா’ எனது பிரிய பக்தன் சாதாரன ஏழைகுடிமகன் அவன் தினந்தோறும் உங்கள் ஊரில் உள்ள ஸ்ரீலக்ஷ்மி நாராயண ஸ்வாமி ஆலயத்திற்கு வந்து விளக்கேற்றி வணங்குகிறான். அதோடல்லாமல் ஒவ்வொரு ஏகாதசி அன்றும், தன்னாலியன்றவரை ஸ்ரீவெங்கடேஸ்வர விரத கல்ப பூஜையும் செய்து வருகிறான். அந்த விரதத்தின் பயனாகவே தன்னோடு அல்லாமல் தன் குடிசை வாழ் மக்களும் காப்பாற்றப்பட்டார்கள். ஆசையால் நீங்களும் இந்த விரதத்தை மேற்கொண்டால் அதன் பயனாக உங்களது இழந்த ஐஸ்வர்யங்களை திரும்ப பெறலாம் என அந்த அசரீரி ஒலித்தது.

அந்த ‘அசரீரி’ கூற்றினை கேட்ட மாத்திரத்தில் வியாபாரிகள் அனைவரும் ஒன்று திரண்டு, ஸ்ரீலக்ஷிமிநாராணன ஸ்வாமி கோவிலுக்கு சென்று, ஆளுக்கொரு வேலையாக செய்து ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பத்தை தொடங்கினார்கள். இந்த விரதத்தின்

பலனாக எல்லோருடைய வீடுகளும் பழைய நிலைக்கு வந்துவிட்டது. இதையுணர்ந்த அந்த வர்த்தகர்கள் அனைவரும் பெருமாளின் பக்தர்களாக மாறி ஒவ்வொரு ஏகாதசி அன்றும் ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்ப’ பூஜையை வெகு விமரிசையாக செய்துகொண்டு ஆயுள் முழுவதும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்ந்து, இறுதியில் முக்தி அடைந்தனர்’ என ஸ்ரீ வசிஷ்ட மகரிஷி விவரித்தார்.

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

**‘மூன்றாவது அத்யாயம் முற்றிற்று’**

**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிலயே நிதயேர்த்தினாம்**
**ஸ்ரீ வெங்கட நிவாசாய ஸ்ரீநிவாஸாய மங்களம்.**

*****

# ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்’

## நான்காவது அத்யாயம்

## ஸ்ரீ பரத்வாஜ உவாச:

ஸ்ரீமந் நாராயணனுக்கு மிகவும் இஷ்டமான இந்த ‘ஸ்ரீவெங்கடேஸ்வர விரத கல்பத்தின் நான்காவது அத்யாயத்தை மஹாமுனிவரான ஸ்ரீபரத்வாஜ மகரிஷி அவர்கள் இவ்வாறுசொல்கிறார்.

“ஓ! கலியுகவாசிகளே! ஸ்ரீமந் நாராணனின் பரியபக்தர்களே! நீங்கள் அனுஷ்டிக்கும் இவ்விரதம் மிகவும் அற்புதமானது. உங்கள் வேண்டுகோள்களை நொடியில் தீர்க்கும் உபாயகரமானது. ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமாளின் அருளைப்பெற இதுவே சுலபமான வழி. உங்கள் எல்லோரையும் அனுக்கிரகிப்பதற்காக சாட்சாத் அந்த வைகுண்டவாசியே கலியுகத்தில் திருமலைவாசனாக ஏழுந்தருளியுள்ளார். பூர்வஜென்ம புண்யபலம் இருந்தாலொழிய எவரும் திருமலையில் காலடி வைக்க முடியாது. தரிசனமும் சாத்யமாகாது. அதைப்போல ஸ்ரீவெங்கடேஸ்வர விரதகல்பத்தை சங்கல்பம் செய்து கொள்வதுகூட பூர்வஜென்ம புண்யபலமே. விரதம் மேற்கொண்டவர்கள், கதை கேட்பவர்கள் மற்றும் பிரசாதத்தை பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் ஏழுமலையானின் கிருபையை அடைந்து பாக்யசாலிகள் ஆவார்கள்.

முன்னொருகாலத்தில் ‘நகரி’ என்ற கிராமத்தில் தனகுப்தன் என்ற வியாபாரி வசித்து வந்தான். அவன் மிகவும் கஞ்சக் கருமியானவன். அவனது பொருளாதாரம்

பெருகினாலும் அவனது கருமித்தனத்திற்கு எல்லையே இல்லை. இந்த தன, தான்ய, ஐஸ்வர்கயங்கள் யாவும் தனக்கு பெருமையே என கர்வப்பட்டுக்கொண்டிருந்தான். எப்பேர்ப்பட்டவனாக இருந்தாலும் தனது அகங்காரத்தால் தானே தன் அழிவைத் தேடிக்கொள்கிறான்.

தனகுப்தனின் மனைவி காந்திமதி மிகவும் பக்தி, சிரத்தை உடையவர், அவருக்கு மூன்று பெண்கள், கடைசி மகளான குமாரிக்கு தெய்வ பக்தி அதிகம். எப்போதும் அந்த 'ஸ்ரீநிவாஸ பெருமானையே ஸ்மரனை செய்துகொண்டு இருப்பாள்.

குமாரி தன் தந்தைக்குத் தெரியாமல் முடிந்த போதெல்லாம் ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி கோவிலுக்குப் போய் தரிசனம் செய்துகொண்டு வருவாள். வரும்போது கோவில் பிரசாதத்தை கொண்டுவந்து வீட்டிலுள்ள வர்களுக்குக் கொடுப்பாள். எல்லோரும் பக்தி சிரத்தையுடன் பெற்றுக்கொண்டு சாப்பிடுவார்கள். ஆனால் தந்தை மாத்திரம் பிரசாதம் வாங்கிக் கொள்ளமாட்டார். கணவரின் நடவடிக்கையைப் பார்த்து காந்திமதி மிகவும் கவலைப்பட்டாள்.

ஒரு நாள் குமாரி தனது தோழி வீட்டில் 'ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் நடைபெறப்போவது தெரிந்து, தானும் கலந்து கொள்ளலாமென அவள் வீட்டிற்குச் சென்றாள். விரதம் முடிவடைய நண்பகலாகிவிட்டது. பிரசாதம் பெற்றுக் கொண்டு, தானும் உண்டு தன் வீட்டிற்கும் எடுத்துச் சென்றாள். பாதிதூரம் வந்து கொண்டிருக்கும்போது அனல்காற்று, வெய்யில்

அதிகமாயிற்று. அவள் எங்காவது ஓரிடத்தில் சற்று தாகம் தீர்த்துக் கொள்ளலாமென நினைத்தபோது, பக்கத்துத்தெருவில் உள்ள தனது தந்தையின் கடை ஞாபகம் வந்தது. அந்த கடைக்குள் போய், விரதம் பற்றி தந்தைக்கு சொன்னால் கோபித்துக் கொள்வார் என்ற பயத்தால் ஒன்றும் பேசாமல் அவசர அவசரமாக தண்ணீர் குடித்துவிட்டு வீட்டை நோக்கி புறப்பட்டாள். அவசரத்தில் பிரசாதத்தை கடையிலேயே வைத்து மறந்துவிட்டாள்.

திடீரென்று அந்த தெருவில் பதட்டம் ஏற்பட்டது. மக்களெல்லம் அலறிக்கொண்டு ஓடுகின்றனர். பெரிய தீ விபத்து ஏற்பட்டு, அந்த தெருவில் உள்ள கடைகள் யாவும் அக்னி பகவானுக்கு இறையாகின. பட்டபகல் வேளை அத்துடன் அனல்பறக்கும் சூறாவளிக்காற்று தனகுப்தனின் சரீரம் பயத்துடன் நடுங்கியது இன்னும் சற்று நேரத்தில் இந்த அக்னி பிழம்பு தன் கடையையும் பற்றி கொண்டுவிடப் போகிறதே என்ற பீதி ஏற்பட்டது. கடைகளிலிருந்து எல்லோரும் பயந்து ஓட ஆரம்பித்தனர். ஆனால் தனகுப்தன் தன் கடையிலிருந்து போக மனமில்லாமல் அங்கேயே இருந்தான். தனகுப்தனும் குடிசைகளுடன் எரிந்து சாம்பலாக வேண்டிய நிலை. இந்த பதட்டத்தில் கையில் ஏதோ ஒரு பொட்டலம் கிடைத்தது. எந்தவித ஆலோசனையும் இல்லாமல் பொட்டலத்தை பிரித்து வாயில் போட்டுக்கொண்டான். அதனால் தனகுப்தனின் மனது மேலும் நிம்மதி அடைந்தது போலத்தோன்றியது.

அச்சமயத்தில் ஒரு அற்புத நிகழ்ச்சி நடந்தது, அக்னி பிரவாசமானது தனகுப்தனின் கடைக்கு முன்னாலுள்ள கடையோடு நின்றுவிட்டது. ஒரு சிறிய தீப்பொறிகூட தனது

கடையின்மேல் படவில்லை. என்ன அதிசயம்! என்ன ஆச்சர்யம்!! தனகுப்தனுக்கு பேச நா எழவில்லை. இதற்குள் விடியமறிந்த தனகுப்தனின் மனைவி காந்திமதி மிகுந்த அச்சத்துடன், தனது பெண்களையும் அழைத்துக் கொண்டு, ஸ்ரீநிவாசப் பொருமானை வேண்டிக்கொண்டே கடையருகில் வந்தாள். கடைவரை வந்த தீப்பிழம்பு பக்கத்து கடை வரை வந்து அனைந்ததைக் கண்டு திக்பிரமை பிடித்து நின்றனர். அப்போது தனகுப்பதனின் மகள் குமாரிக்கு தான் கடையில் மறந்து வைத்து விட்டுப்போன பிரசாதம் நினைவுக்கு வந்தது. தனகுப்தன் தான் அந்த பொட்டலத்தில் இருந்து உண்டது ஏதோ இனிப்பு என்று நினைத்தான். பிறகு குமாரி அப்பொட்டலம் ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி பிரசாதம் என்றும், தான் தோழியின் வீட்டில், விரதத்தில் கலந்து கொண்டது பற்றியும் விவரித்தாள். இதைக்கேட்ட தனகுப்தன் தான் உண்ட அந்த (இனிப்பு) பிரசாதத்தின் மகிமையால் தான் அந்த விபத்திலிருந்து தப்பித்ததாக உணர்ந்தான்.

ஏழுமலையானை மன்னிக்கும்படி கன்னத்தில் போட்டுக் கொண்டான். அன்று மாலையே ஊர்மக்களையெல்லாம் அழைத்து ஸ்ரீ வெங்கடேஸ்வர பூஜையை பக்தி சிரத்தையுடன் வெகு விமரிசையாக செய்தான். அப்பொழுது முதல் அந்த வணிகன் தனகுப்தன் முழுமையாக தெய்வசேவைக்கே தனது ஆயுளை சமர்ப்பித்து இறுதியில் முக்தி அடைந்தான்.

தனகுப்தன் விரதத்தின் பிரசாதத்தை உண்டதாலேயே இத்தனை பெரிய ஆபத்திலிருந்து விடுபட்டான், எனவே விரதத்தின் மகாத்மியம் எவ்வளவு அற்புதமானது என அறிந்து கொள்ளலாம். எனவே புலோக வாழ் மக்களும்

முடிந்தபோதெல்லாம் இவ்விரதத்தை மேற்கொண்டு ஸ்ரீநிவாஸ கிருபைக்கு ஆளாக வேண்டும்' ஸ்ரீ பரத்வாஜ மகரிஷி அருளினார்.

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

**'நான்காவது அத்யாயம் முற்றிற்று'**

**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிலயே நிதயோர்த்தினாம்**
**ஸ்ரீ வெங்கட நிவாசாய ஸ்ரீநிவாஸாய மங்களம்.**

*****

# ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்’

## ஐந்தாவது அத்யாயம்

## ஸ்ரீ அத்ரி உவாச:

பூலோக வைகுண்டமே திருமலை-திருப்பதி, திருமலைக்கு சமமான புண்ய க்ஷேத்திரமோ, ஸ்ரீ வெங்கடேச பொருமானுக்கு சமமான தெய்வமோ இதற்குமுன்பு இல்லை என்றும், இனியும் இருக்காது என் புராணங்களில் கூறப்படுகின்றன. ஸ்ரீநிவாஸ பெருமானாக தோன்றிய ஸ்ரீமந் நாராயணனுக்கு தன பக்தர்கள் என்றால் எல்லையில்லா அன்பு, ஆனந்தம் எவனொருவன் தன்னை முழுமையாக நம்பி, தினமும் தன்னையே (ஸ்ரீமந் நாராயணனை) நினைத்து பூஜித்துக் கொண்டு இருக்கிறார்களோ அவர்களது யோக க்ஷேமங்களை தானே முன்வந்து கவனித்துக் கொள்கிறார். அத்தகைய திவ்ய தெய்வத்தை பிரசன்னம் செய்து கொள்வதற்கு மிகவும் எளிமையான மார்க்கமே இந்த ‘ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம்!

இத்தகைய அற்புதமான விரத கல்பத்தின் ஐந்தாவது அத்யாயத்தை மஹாதபஸ்வியான ஸ்ரீஅத்ரி மகரிஷி அவர்கள் கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளார்.

கலியுக வாசிகளே ஸ்ரீநிவாச பக்தர்களே! உங்கள் அதிர்ஷ்டம் சொல்லிலடங்காதவை. க்ருத, த்ரேத, துவாபர யுகங்களில் எத்தனையோ கடோ நியம, நிஷ்டைகளுடன் புஜித்தாலொழிய காட்சி தராத ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, கலியுகத்தில் வெறும் நாமஸ்மரணத்தாலேயே உங்களை அனுக்கிரஹிக்கிறார். மிகவும் பக்தி சிரத்தையுடன் பூஜிப்பவர்களின் அழைப்பை உடனே ஏற்றுக்கொள்பவர்

அந்த கருணமூர்த்தி. அவர் எழுந்தருளியிருக்கும் திருமலை க்ஷேத்திரமெல்லாம் சாலிகிராம மயமே. அத்தகைய பவித்ரமான மலையின்மேல் நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியும் பூர்வஜென்ம புண்ய பலனேயாகும்.

முன்பொருகாலத்தில் கௌமார தேசத்தில் 'மித்ரன்' எனும் வண்ணான் ஒருவன் வசித்து வந்தான். அவன் தனது குலத்தொழிலை செய்வதோடு அல்லாமல் மீதமுள்ள நேரத்தில் தான தர்மங்கள் செய்து கொண்டு மிகவும் தரும சீலனாக வாழ்ந்து கொண்டு இருந்தான். ஆனால் அவனது மனக்கவலையோ அவனுடைய உடல் ஊனம் தான். அவனது கால் ஊனமானதால், துவைத்த துணிமூட்டைகளை வீடுவீடாக சென்று கொடுப்பது என்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. அதற்கேற்றாற்போல் அவனது குடும்பம் மிகவும் பெரியது. கஷ்டப்பட்டு உழைக்காவிட்டால் அவனது குடும்பத்திற்கு உணவு கிடைக்காது. எப்போதும் அந்த ஸ்ரீநிவாசப்பெருமானையே பிராத்திக்கொண்டு, ஏதோ ஒருநாள் அந்த ஸ்வாமி தன்னை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டு இருந்தான். பக்தஜன ஸ்வருபனான அந்த நாராயன மூர்த்தியும் இதனை கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார். எவரானாலும் தனது பூர்வ ஜென்ம கர்மங்கள் நிவர்த்தி அடையும் தருணத்தில் அந்த ஸ்ரீநிவாஸப் பொருமானே ஏதோ ரூபத்தில் வந்து தனது பக்தர்களைக் காப்பாற்றுகிறார்.

ஒருநாள் மாலை எப்பொழதும் போல் மித்ரன் துணி துவைக்கும் ஓடையிலிருந்து துணிகள் மூட்டையுடன் பட்டணத்திற்கு மிகுந்த களைப்புடன் திரும்பி வந்துகொண்டிருந்தான். வழியில் வயது முதிர்ந்த ஒரு பெரியவர் எதிரானார். உடனே மித்ரன் தன் தோளிலிருந்த மூட்டைகள் இறக்கி வைத்துவிட்டு, மிகவும் பக்தி

சிரத்தையுடன் அந்த வயது முதிர்ந்த பிராம்மணரை நமஸ்கரித்து வணங்குகிறார். உடனே அந்த வயோதிகர் அவனைப்பார்த்து, ‘அப்பனே! இந்த ஊனமுற்ற காலுடன் மிகவும் அவஸ்த்தைப்படுகிறாய். உனது கஷ்டத்தை பார்க்கவே வேதனையாக உள்ளது. ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய், என்று கேட்டார். அதற்கு மித்ரன், ‘ஸ்வாமி உங்களைப்பார்த்தால் பெரிய மகானாக தெரிகிறீர்கள், எனது குடும்பம் மிகப்பெரியது. எனது குடும்பத்தைக் காப்பாற்ற நான் இந்த தொழில் செய்துதான் ஆகவேண்டும். எனது ஊனம் போகும் மார்க்கம் ஏதானும் இருந்தால் சொல்லுங்கள்'' என வேண்டிக் கொண்டான்.

அதற்கு அந்த முதியவர், ‘அப்பனே தப்பாமல் சொல்கிறேன். கவனமாகக்கேள். உனது ஊனம் மறைந்து விடுவதோடல்லாமல், உனக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களும் ஏற்படும்படியாக விரதம் ஒன்று சொல்கிறேன், விரதம் ஆரம்பித்த மறுநிமிடமே உனக்கு ஆயிரம் பொற்காசுகள் கிடைக்கும். ஆனால் அதில் பாதியை நீ எனக்கு சமர்ப்பிக்க வேண்டும். நாளைமாலை இதே நேரத்தில் இங்கு வருவேன்''. என்று சொன்னார்.

அதற்கு மித்ரன், ‘ஸ்வாமி இதைவிட மகாபாக்யம் வேறென்ன இருக்கிறது. அந்த விரதத்தை இன்றே ஆரம்பிக்கிறேன், ஆசிர்வதியுங்கள்'' என்று பிரார்த்தித்தான். உடனே அந்த பிராம்மணர் ஸ்ரீவெங்கடேஸ்வர விரத கல்ப மகிமையை விவரித்தார். மித்ரன் மிகவும் ஆனந்தத்துடன் வீட்டிற்கு வந்து, அக்கம்பக்கம் உள்ளவர்களை அழைத்து, ஸ்ரீவெங்கடேஸ்வர விரதம் செயது, தீர்த்த பிரசாதத்தை தானும் ஸ்வீகரித்து, வந்தவர்களுக்கும் கொடுத்தான்.

இதற்குள் வீட்டுவாசலில் ஏதோ கோலாகலம் கேட்டது. மித்ரனின் தனயன் வீட்டிற்குள் வந்து, ஐயா! சேவகர்கள் உங்களுக்காக வந்துள்ளனர். மகாராஜா அவர்கள் உங்களை பார்க்க அனுப்பி உள்ளார் என்று சொன்னார்கள். இதற்குள் சேவகர்கள் உள்ளே வந்து, 'மித்ரனிடம் ராஜா அவனை அரண்மனை ஆஸ்தான வண்ணானாக நியமித்து ஆயிரம் பொற்காசுகளை வெகுமதியாக அனுப்பி உள்ளதாக சொன்னார்கள். மேலும் ஒரு வாரத்திற்குள் வந்து அரண்மனையை அடைய வேண்டும் எனவும் சொன்னார்கள். மித்ரனின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஒரு வாரம் தேவையில்லை நாளையே வந்து சேருகிறேன் என்று பெட்டி படுக்கையுடன் அரண்மனைக்கு புறப்பட்டான். இந்த ஆனந்த, மயக்கத்தில் முதியவரை மறந்தே போய்விட்டான். வழியில் நியாபகம்வர ஒரு மாதத்திற்கு பிறகு சந்திக்கலாம் என்று நினைத்து ராஜ அரண்மனையில் வண்ணானாக சேர்ந்துவிட்டான். நாட்கள், மாதங்களாக போய்க் கொண்டிருந்தன. அந்த முதியவருக்கு அளித்த வாக்கை மறந்தே போய்விட்டான். இதனால் பிராம்மண ரூபத்தில் வந்த ஸ்வாமிக்கு கோபம் வந்து விட்டது. மனிதர்களின் தத்துவம் இதே என்று மித்ரன் நிருபித்து விட்டான். இவனுக்கு தனது மகத்துவத்தை தெரிய வைக்க வேண்டும் என நிர்ணயித்துக் கொண்டார்.

மறுநாள் அரண்மனையில் மகாராணியின் ஆபரணங்கள் மாயமாகிவிட்டன. இந்த அபாண்டம் (பழி) மித்ரனின் மேல் விழுந்தது. ஆகையால் மித்ரனுக்கு கடும் சிறை தண்டனை கிடைத்தது. அரண்மனை சேவகர்கள் கூட பலவிதங்களில் தண்டித்தனர். இதையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் மித்ரன், தனக்கு ஏன் இப்பழி வந்தது.

தான் என்ன தவறு செய்தோம் என்று தீவிரமாக யோசித்தான். அன்று இரவு ஸ்வாமி அவர்கள் அவன் கனவில் தோன்றி, 'முதியவர் ரூபத்தில் வந்தது தானே என்றும், தனக்கு கொடுத்த வாக்கை நீ காப்பாற்றவில்லை என்பதாலேயே இவ்வாறு ஏற்பட்டு அவதிப்படுகிறாய்'' என்று கூறினார். அப்போது மித்ரன் ஸ்வாமியைப் பார்த்து, ''இறைவா'' நான் பாபாத்மா' எத்தகைய அபசாரம் செய்துவிட்டேன். தயவுசெய்து என்னை மன்னியுங்கள். இனிமேல் ஒவ்வொருமாதமும் தப்பாமல் தங்களது விரதத்தை மேற்கொண்டு, எனது ஊதியத்தில் பாதியை என் ஆயுள் உள்ளவரை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன் என்று நாராயணனை பிரார்த்தித்தான். பக்தஜனஸ்வரூபமான ஸ்ரீமந் நாராயணன் சந்தோஷித்து மித்ரனை மன்னித்து அனுக்கிரதித்தார். ஸ்ரீ வாரி அனுக்கிரகத்தால் ராணியின் ஆபரணங்கள் வெறொரு இடத்தில் மறுநாளே கிடைத்தது, மித்ரன் திருடவில்லை என ராஜாவே தெரிந்து கொண்டார். மித்ரனை ஜெயிலில் இருந்து விடுவித்தனர். அப்பொழுது முதல் மித்ரன், ஸ்வாமியிடம் வேண்டியபடி ஒவ்வொரு மாதமும் ஸ்ரீவெங்கடேஸ்வர விரதம் செய்து, தனது மாத ஊதியத்தில் பாதித்தொகையை ஸ்ரீமந் நாராயணனுக்கு சமர்ப்பித்து நீண்டநாள் சுகமாக வாழ்ந்து இறுதியில் முக்தி அடைந்தான்' என அத்ரி மகரிஷி விவரித்தார்.

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

**'ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று'**

**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிலயே நிதயோர்த்தினாம்**
**ஸ்ரீ வெங்கட நிவாசாய ஸ்ரீநிவாஸாய மங்களம்.**

ஸ்ரீ வெங்கடஸ்வர விரத கல்பம் சமாப்தம்

******